V6T

விருதுநகர் மாவட்டம்

மூன்றாம் இடைப் பருவத் தேர்வு - 2025

-----

# வகுப்பு 6

## தமிழ்

நேரம் : 1.30 மணி | மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **5×1=5**

1) தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் -----
அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

2) காந்தியடிகள் ----- அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்
அ) நாமக்கல் கவிஞர் ஆ) பாரதிதாசன்
இ) உ.வே.சாமிநாதர் ஈ) பாரதியார்

3) தம்+உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -----
அ) தம்முயிர் ஆ) தமதுயிர் இ) தம்உயிர் ஈ) தம்முஉயிர்

4) மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு -----
அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத் தீவு
இ) மணிபல்லவத் தீவு ஈ) மாலத் தீவு

5) இடுகுறிச் சிறப்புப் பெயரை எடுத்தெழுதுக.
அ) வயல் ஆ) வாழை இ) மீன்கொத்தி ஈ) பறவை

**II. குறுவினா: (மூன்றனுக்கு மட்டும் விடையளி)** **3×2=6**

6) இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.

7) உழைக்கும் போது என்னவாக ஆகிறோம்?

8) அமுதசுரபியின் சிறப்பு யாது?

9) சொற்களின் வகைகளை எழுதுக.

10) ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது?

**III. சிறுவினா: (ஒன்றனுக்கு மட்டும் விடையளி)** **1×4=4**

11) காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

12) பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?

**IV. அடிபிறழாமல் எழுதுக:** **3+2=5**

13) 'அன்னை' எனத் தொடங்கி 'வாசலிது' என முடியும் தாராபாரதியின் பாடலை எழுதுக.

14) 'இன்னா' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** **2×2=4**

15) **கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக:**
அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.
ஆ) அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.

16) **பின்வரும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்கள் எவ்வகைப் பெயர்கள் என எழுதுக:**
அ) குழந்தை தெருவில் விளையாடியது.
ஆ) நீதிநூல் பயில் என்கிறார் பாரதியார்.

17) **கலைச்சொல் தருக:** அ) Patriotism ஆ) Volunteer

**VI. கட்டுரை எழுதுக:** **1×6=6**

18) அ) தேசிய ஒருமைப்பாடு **(அல்லது)**
ஆ) 'பாதம்' கதையைச் சுருக்கி எழுதுக.

----------